# விசுவாச வாழ்க்கையில் தேவனுடைய பங்கும் நமது பங்கும்.

*ஆதி 17:1 ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு.*
சர்வ வல்லமையுள்ள தேவன். இதன் எபிரேய பதம் " El Shaddai". இவ்வார்த்தை வேதாகமத்தில் சுமார் 218 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. El என்ற வார்த்தை "வல்லமையுள்ளவர் " என்பதை குறிக்கிறது. Shaddai என்ற வார்த்தை 'பால்கொடுக்கும் மார்பு உள்ள' என்பதை குறிக்கிறது. அதாவது இவ்வார்த்தை தேவனை " தன் மக்களுக்கு தேவையான சகலத்தையும் தர வல்லமையுள்ள தேவன் " என்று குறிப்பிடுகிறது.

நம் தேவன் சர்வ வல்லமையுள்ளவர், சர்வ வியாபி, சகலமும் அறிந்தவர். இதில் சிறிதும் ஐயமில்லை. ஆனாலும் இதில் இருந்து மனுஷருடைய பாரம்பரியங்களால் உருவாக்கப்பட்ட ஒரு கருத்து " உலகத்தில் நடக்கும் சகலத் துக்கும், தேவனே காரணர். அவர் செய்கிறார் அல்லது அனுமதிக்கிறார்". வேதாகமத்தின் படி இக்கருத்து சரியான தல்ல. இக்கருத்தினால் பலரும் 'நடப்பது எல்லாம் நன்மைக்கே, எல்லாம் தேவனே நடத்துகிறார், அவரே தீர்மானிக்கிறார்' என்று எண்ணிக்கொண்டு, தங்களுடைய பொறுப்புகளை செய்யாமல் அல்லது தவறான பொறுப்பு களை செய்து கொண்டிருக்கிறார்கள். நடப்பது எல்லாம் தேவனாலேயே நடக்கிறது அல்லது தேவனுடைய அனுமதி இல்லாமல் ஒன்றும் நடக்காது, என்று நம்புவதால் சாத்தான் கொண்டு வருகிற பல காரியங்களை, தேவன் அனுமதியின்படியே நடக்கிறது என்று ஏற்றுக்கொள்கிறார்கள். இதனால் பிரச்சினை களுக்குள், தோல்வி களுக்குள், வேதனைகளுக்குள் மாட்டிக்கொள்கிறார்கள். மேலும் இக்கருத்து தேவனுடைய பெயர் நிந்திக்கப் படுவதற்கு ஏதுவாகிறது. இக்கருத்து எவ்வளவு பிரச்சினைக்குரியது என்பதை கீழ்க்காணும் உதாரணத்தில் இருந்து பார்ப்போம்.

உணவில்லாமல் கஷ்டப்படும் ஒரு 8 வயது பெண்குழந்தை கொடுமையாக சீரழிக்கப்பட்டு கொல்லப்பட்டு கிடக்கும் காட்சியை எடுத்துக்கொள்வோம். **இந்த உலகத்தில் நடக்கும் அனைத்துக்கும் தேவனே காரணர் என்றால், இந்த நிகழ்ச்சியை தேவன் செய்தாரா அல்லது அனுமதித்தாரா ? அப்படி இல்லை என்றால் அவர் ஏன் இதை தடுக்க வில்லை ?**

## ஏவாள் விலக்கப்பட்ட கனியை புசித்தபோது தேவனுக்கு தெரியுமா? தெரியாதா ? அவருக்கு தெரியும் என்றால் அவர் ஏன் அதை தடுக்க வில்லை?

*ஆதி 3:11 அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.*

*எரே 23:24 யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்குமறைவிடங்களில்ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
***( 2 நாளா 16:9; சங் 139:7-12; நீதி 15:3; ஆமோஸ் 9:2-3; சக 4:10 )***
இவ்வசனங்கள் அனைத்தும் தேவனுடைய கண்களுக்கு மறைவானது ஒன்றும் இல்லை என்று சொல்கின்றன.

ஆனால் வேதாகமத்தின் பலவசனங்கள், இந்த உலகத்தில் நடக்கும் அனைத்து சம்பவங்களையும் தேவன் தன் முன்னறிவை உபயோகித்து பார்ப்பதில்லை என்பதை விளக்குகின்றன.
*எரே 7:31 தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோடும் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள்; அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவுமில்லை.*
*எரே 19:5 தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படி வரப்பண்ணுவேன்; இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை.*
*எரே 32:35 அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள்; யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை.*
இவ்வசனங்களில் இருந்து நடக்கும் அனைத்து காரியங்களும் தேவனால் நடப்பது அல்ல என்பது புரியும். பல சமயங்களிலும், பல காரியங்களும் நடக்கப்போவது அவருக்கு தெரியாது, என்று வேத வசனங்கள் சொல்கின்றன. சர்வமும் அறிந்த அவருக்கு இது முடியாது என்பதனால் அல்ல, அவர் தன் சகலும் அறிகிற திறனை, எல்லா சமயங்களிலும் உபயோகப்படுத்துவது இல்லை. ***ஆதி 3:9***, ***மாற்கு 5:30*** போன்ற இடங்களில் கர்த்தர் கேட்கும் கேள்விகள் இதை மேலும் உறுதிப்படுத்தும்.

தேவன், ஆதாமையும் ஏவாளையும் இந்த உலகத்தை ஆளுபவர்களாக வைத்தார் ( ***சங் 115:16; 8:6*** ). அவர்களோடு உறவாடுவதற்கு அவர் குறிப்பிட்ட சமயங்களில் வந்தார் ( ***ஆதி 3:8*** ). ஆதியாகமம் 3 ம் அதிகாரத்தில் நடக்கும் நிகழ்வுகளை வைத்து பார்த்தால், தேவன் எப்போதும் ஆதாமோடும் ஏவாளோடும் இருந்து அவர்கள் செய்த அனைத்தையும் கவனித்துக்கொண்டிருக்க வில்லை என்பது நன்றாக புரியும்.

***ஆதி 18:20 - 19:29*** வசனங்களில், சோதோம் கொமாரா பட்டினங்களில் நடக்கின்றவற்றை கண்டு அறியும்படி இரண்டு தூதர்களை தேவன் அனுப்பினார். ***ஆதி 22:1-10*** வசனங்களில் தேவன் ஆபிரகாமை பரிசோதித்தார். பின் சொல்லுகிறார் *"ஆதி 22:12 அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்."*

தேவன் சவுலை ராஜாவாக தெரிந்தெடுத்தார், ஆனால் பின் சவுல் செய்த காரியங்களினால் இப்படி சொல்லுகிறார் *" 1சாமு 15:11 நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்......".* வேதாகமத்தில் இன்னும் *ஆதி 6:6,7; நியா 2:18; 1 சாமு 15:35; 2 சாமு 24:16; 1 நாளா 21:15; சங் 106:45; எரே 26:3,13; யோவேல் 2:13;* லூக்கா 17:3 போன்ற பல உதாரணங்களை நாம் இப்படி காண முடியும்.

## தேவனுடைய முன்னறிவு

*ரோம 8:29 தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;*
இவ்வசனத்தில் தேவனுடைய முன்னறிவு என்பது "தேவன் அவருடைய ஈவான இரட்சிப்பை யார் யார் ஏற்றுக்கொள்வார்கள் என்று முன்பே அறிந்திருக்கிறார்" என்பதை குறிப்பிடுகிறது.
*எபே 1:4 தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,*
நமது செயல்கள் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ளும் ஆற்றல் தேவனுக்கு அளவில்லாமல் இருக்கிறது என்பது இவ்வசனத்தில் இருந்து நன்றாக புரியும்.
ஆகவே நாம் மனதிலாக்கிக்கொள்ளலாம், " எதையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளும் ஆற்றல் முழுமையாக தேவனுக்கு உண்டு; ஆனாலும் அவர் அவரது தீர்மானத்தின்படி எல்லா சூழ்நிலைகளிலும் அதை உபயோகிப்பது இல்லை".

தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது,
*ரோம 16:19 ....... ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். பிலி 4:8 கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.*
நாம் நல்லவற்றையே சிந்தித்துக்கொண்டு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினால் அதன் அர்த்தம் அவரும் நல்லவைகளையே சிந்தித்துக்கொண்டிருக்கிறார். இது தேவனுடைய சர்வ வல்லமையை குறைத்து மதிப்பிடுவது அல்ல. இது தேவனுடைய சுபாவத்தை சரியாக மதிப்பிடுவது.

ஆதாமும் ஏவாளும், விலக்கப்பட்ட கனியை புசித்ததை அறிந்து தேவன் வியப்படைந்தார் என்பது உண்மையே. நாம் *எபே 1:4* ல் பார்த்தது போல, மனிதன் கீழ்ப்படியாமல் பாவத்துக்கும் சாத்தானுக்கும் அடிமையாய் போவான், அதனால் அவன் மீட்கப்பட வேண்டும் என்பதற்காக மீட்பின் திட்டத்தை தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்பே செய்து வைத்திருந்தார். ஆனாலும் மனிதனுடைய ஒவ்வொரு அசைவையும் முன்கூட்டியே தெரிவதற்காக தன்னுடைய முன்னறிவை தேவன் உபயோகிக்க வில்லை. அப்படி உபயோகிப்பது மனிதர்களுடனான அவரது உறவை பாதிக்கும் என்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆகவே ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியை புசிப்பது எப்போது என்று உற்றுப்பார்ப்பதற்காக தேவன் தன் முன்னறிவை உபயோகிக்கவில்லை. இதுதான் அவருக்கு அவர்கள் செய்தது தெரியாமல் இருக்க ஒரே காரணமாக இருக்க முடியும். அவருக்கு தெரியாமல் நடக்கிற ஒரு காரியத்தை அவரால் தடுக்கவும் முடியாது.

## தேவனுடைய சித்தம், நம் வாழ்க்கையில் நமது ஒத்துழைப்பு இன்றி தானாகவே நிறைவேற முடியாது.

*2பேது 3:9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். ( யோவான் 3:16,17 )*
**"ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும்"** என்பது தேவனுடைய சித்தம். உலகமக்கள் அனைவருடைய இரட்சிப்புக்காகவே இயேசு மரித்தார் ( *யோவான் 1:29; 2 கொரி 5:14-15; 1 யோவான் 2:2* ). ஆனாலும் பலரும் மனந்திரும்ப வில்லை என்பது நமக்கு நன்கு தெரியும். இயேசுவே பலரும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். *மத் 7:14 ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.* தேவனுடைய சித்தம் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று இருந்தாலும், ஜீவனையும் மரணத்தையும் தேர்ந்தெடுக்கிற உரிமை மனிதருக்கே இருக்கிறது ( *உபா 30:19* ). தேவன் தன்னுடைய சித்தத்தை யார் மேலும் கட்டாயமாக திணிக்க

மாட்டார். மனிதர் தங்களுடைய விசுவாசத்தால் தேவனுக்கு ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் தேவனுடைய சித்தம் அவர்களது வாழ்க்கையில் நிறைவேறும்.

*மாற் 6:5 அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல்,மத் 13:58 அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.* *மாற் 6:5* சொல்லுகிறது **" அற்புதம் செய்யக்கூடாமல் ".** அவர்களுடைய அவ்விசுவாசம், இயேசுவை அற்புதம் செய்யாமல் தடை செய்தது என்று மத் 13:58 சொல்லுகிறது. தேவன் தன் சித்தத்தை நிறைவேற்ற, அல்லது ஒரு அற்புதத்தை செய்ய வேண்டுமானால், அதை பெற்றுக்கொள்ளும் மனிதர் ஒரளவு விசுவாசம் காண்பிக்க வேண்டும் ( *லூக்கா 7:13; 8:45; 8:50-51* ).
எல்லாரும் சுகமாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் ( *3 யோ 2; மத் 8:16,17* );ஆனாலும் பலரும் சுகமடைவது இல்லை. ஏனென்றால் பலரும் விசுவாசிப்பது இல்லை ( *எபி 4:2* ). எல்லோரும் ஐசுவரியவான்களாக ஆக வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் ( *2 கொரி 8:9; 3 யோவான் 2* ). ஆனாலும் பலரும் அதை விசுவாசிக்காததனால் அவர்களை ஐசுவரியவானகளாக்க தேவனால் முடிய வில்லை.

*உபா 7:17 அந்த ஜாதிகள் என்னிலும் ஜனம் பெருத்தவைகள், நான் அவர்களைத் துரத்திவிடுவது எப்படி என்று உன் இருதயத்தில் சொல்லிக்கொண்டாயானால், ( If thou shalt say in thine heart, These nations are more than I;* ***how can I dispossess them? )*** "இஸ்ரவேல் மக்கள் விசுவாசிக்காவிட்டால், தேவன் அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை ( *எண் 33:53* ) நிறைவெற்ற முடியாது" என்று தேவனே சொல்லுகிறார்.

*சங் 78:41 அவர்கள் திரும்பி தேவனைப் பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்.*
மனிதர்களால் தேவனை மட்டுப்படுத்த முடியும். நாம் தேவனைப்பற்றி என்ன நினைத்தாலும், அவர் எல்கைகள் இல்லாதவர். ஆனால் நம்முடைய அனுபவத்தை பொறுத்த வரையிலும், நாம் எவ்வளவு விசுவாசிக்கிறோமோ அவ்வளவே தேவனிடம் இருந்து விடுதலைகளை பெற்றுக்கொள்ள முடியும். தேவன் சுகமாக்குவதில்லை என்று விசுவாசிப்பவர்களால் சுகத்தை பெற்றுக்கொள்ள முடியாது. இக்காலத்தில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் இல்லை என்று விசுவாசிப்பவர்களால் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், விசுவாசத்தோடு கேட்கும் அந்த நிமிடமே கொடுக்கப்படுகிறது என்று விசுவாசிக்காதவர்கள் அதை பெற்றுக்கொள்ள முடியாது. பாவங்கள் மன்னிக்கப்பட வில்லை என்று விசுவாசிப்பவர்கள் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியாது. தேவன் ஒன்றையும் நம்மேல் திணிக்க மாட்டார். நாம் விசுவாசிக்க வேண்டும். அப்போதுதான் அது நமக்கு நிறைவேறும். **விசுவாசம், தேவனுடைய எல்லைகளை இல்லாமல் ஆக்குகிறது. அவ நம்பிக்கை தேவனுக்கு எல்லைகளை வைக்கிறது.** நம்முடைய முழு ஒத்துழைப்பு இல்லாமல், தேவனுடைய சித்தம் நம் வாழ்க்கையில் நிறைவேற முடியாது. நம்முடைய அவ நம்பிக்கை தேவனை மட்டுப்படுத்தி அவரை தடுக்கும்.

## நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே...... தேவன் மிகவும் அதிகமாய் செய்கிறார்.

*எபே 3:20 நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,*
இவ்வசனம் தெளிவாக சொல்லுகிறது, " தேவன், நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்கு செய்வது - **நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே** ". நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமை இல்லாவிட்டால் தேவனுடைய வல்லமை நம்மூலமாய் கடந்து வர முடியாது. *அப் 1:8* ல் பரிசுத்த ஆவியானவரால் வரும் பெலன் குறிப்பிடப்பட்டுள்ளது. *ரோமர் 1:16* ல் சுவிசேஷம் தேவனுடைய வல்லமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. *1 கொலோ 1:24* ல் இயேசு, தேவனுடைய வல்லமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே எபே 3:17 ம் வசனத்தையும் சேர்த்து பார்க்கும்போது **"கிறிஸ்து நம் இருதயங்களில் வாசமாயிருப்பதை"**தான் பவுல் நமக்குள்ளே கிரியை செய்யும் வல்லமை என்று குறிப்பிடுகிறார். தேவன் நம் வாழ்க்கையில் செய்கிற அனைத்தையும் - இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியின் வல்லமை, விசுவாசம், வேத வசனம், அன்பு - போன்ற அனைத்தையும் தேவனுடைய வல்லமை என்று குறிப்பிடலாம்.
**நாம் இல்லாமல் தேவனால் நம் வாழ்க்கையில் ஒன்றும் செய்ய முடியாது என்று இல்லை; நாம் இல்லாமல் தேவன் ஒன்றும் நம் வாழ்க்கையில் செய்ய மாட்டார்.**

## கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர்

*ரோம 8:17 நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*
தொடக்கத்தில் எல்லா அதிகாரமும் வல்லமையும் தேவனிடமே இருந்தது. தேவன் பின் மனிதனை சிருஷ்டித்த போது சொன்னார்...
*ஆதி 1:26 பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*
*சங் 115:16 வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக்கொடுத்தார்.*
ஆதியில் எல்லா அதிகாரமும் தேவனிடம் இருந்தது. எல்லா அதிகாரங்களும், வல்லமைகளும் அவரிடம் இருந்தே தோன்ற வேண்டும், ஏனென்றால் **தன்னில்தாமே வல்லமை உள்ளவர் அவர் மாத்திரமே.** எல்லா அதிகாரங்களும்

வல்லமைகளும் அவரிடம் இருந்தே தோன்றியவை. பின் ஆதியாகமம் 1;26 - ல் தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்த போது அவர் சொன்னார் *"............அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்."*

*சங் 115:16 வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக்கொடுத்தார்.*

சிருஷ்டிகராய், தேவனே எல்லாவற்றின் மேலும் உரிமை உள்ளவர். எல்லாம் அவருக்கே சொந்தம். ஆனால் நம் தேவன், **பூமியின் மேல் அரசாளும் உரிமையை அல்லது அதிகாரத்தை உலகத்திலுள்ள மனுஷர்களுக்கு கொடுத்தார்.** சாத்தானுக்கு ஒரு போதும் பூமியை ஆளுவதற்கான உரிமையோ வல்லமையோ இருந்ததில்லை. ஆனால் சாத்தான் - மனிதனை பாவம் செய்யுமாறு வஞ்சித்ததன் மூலம் - பூமியை ஆளும் உரிமையை, மனிதனிடம் இருந்து எடுத்துக்கொண்டான். பூமியை அரசாளும் உரிமையை, தேவன் மனிதனுக்கு கொடுத்திருந்தார். அந்த மனிதன் பாவத்தில் விழுந்த போது, தேவன் அவனுக்கு கொடுத்திருந்த பூமியை அரசாளும் அதிகாரத்தை - சாத்தானுக்கு விட்டுக்கொடுத்து விட்டான்.

*2கொரி 4:4 தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

இந்த வசனம் சாத்தானை **இந்த உலகத்தின் அதிபதி** என்று சொல்லுகிறது. ஆனால் சாத்தான் இந்த உலகத்தின் அதிபதி ஆனது - தேவன் அவனை இந்த உலகத்தின் அதிபதி ஆக்கினதால் அல்ல. தேவன் ஒரு போதும் சாத்தானை மனிதனை விட ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் வைக்க வில்லை. தேவன் பூமியை ஆளும் அதிகாரத்தையும் வல்லமையையும் மனிதனுக்கு கொடுத்தார். ஆனால் இந்த அதிகாரத்தை மனிதன் சாத்தானுக்கு விட்டுக் கொடுத்ததால் - சாத்தானால் இப்போது மனுஷரை ஒடுக்க, அடக்க , துன்பப்படுத்த - முடிகிறது.

இது தேவனுக்கு ஒரு பிரச்சினையாக இப்போது ஆகி விட்டது. தேவன் ஆவியாயிருக்கிறார். ஆவியாயிருக்கிற தேவன், இந்த பூமியின் மேலுள்ள அதிகாரத்தை பௌதீக மனுஷனுக்கு கொடுத்து விட்டார். பௌதீக சரீரம் உள்ளவர்களுக்கே - பூமியை அரசாள, பூமியின் மேல் தங்கள் செல்வாக்கை உபயோகிக்க - அதிகாரமும் வல்லமையும் உண்டு. தேவன் ஆவியாயிருக்கிறார், இப்போது அவர் பூமியின் அதிகாரத்தை பௌதீக மனுஷனுக்கு கொடுத்து விட்டார். ஒரு வகையில் பார்க்கும்போது அவருடைய கைகள் கட்டப்பட்டிருப்பது போன்ற ஒரு நிலமை. இது தேவனுக்கு வல்லமையும் அதிகாரமும் இல்லை என்பதால் அல்ல, மாறாக அவருடைய நேர்மையால். தேவன் அதிகாரத்தை பௌதீக மனுஷனுக்கு கொடுத்து விட்டார், பின் அவருடைய வார்த்தைக்கு மாறாக மீண்டும் அதிகாரத்தை திரும்ப எடுக்க முடியாது. **தேவன் அவருடைய வார்த்தைக்கு கட்டுப்பட்டவர்.** சரித்திரத்தின் எல்லா சமயத்திலும், ஒரு மனிதன் மூலமாக கிரியை செய்வதற்காக, எப்போதும் ஒரு மனிதனை அவர் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார். ஆனால் பிரச்சினை என்னவென்றால் எல்லா மனிதர்களும் கெட்டுப்போனவர்கள் - சாத்தானுக்கு அடிபணிந்தவர்கள். எனவே அவர் என்ன செய்வது ?.

கடைசியாக தேவன் செய்தது - அவரே பூமிக்கு வந்து மனுஷனானார். இப்போது சாத்தான் பெரிய பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டு விட்டான். சாத்தான் மனுஷருடைய அதிகாரத்தை உபயோகித்துக்கொண்டு இருக்கிறான். தேவனால் நேரடியாக தலையிட்டு இந்த பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க முடியாது, ஏனென்றால் மனுஷன் மனப்பூர்வமாக, சட்டப்படி - தேவன் தனக்கு கொடுத்திருந்த அதிகாரத்தை - சாத்தானுக்கு கொடுத்திருக்கிறான். சாத்தான் செய்கிறது தவறுதான் என்றாலும், மனுஷர்தான் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த வல்லமையையும் அதிகாரத்தையும் அவனுக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது, இதோ தேவன் வருகிறார்....அவர் இப்போது ஆவியாய் மாத்திரம் அல்ல மாம்ச சரீரத்தோடும் இருக்கிறார். இது சாத்தானை ஒரு மிக மோசமான நிலமைக்குள் தள்ளி விட்டது. **தேவனுக்கு பரலோகத்தில் எல்லா அதிகாரமும் உண்டு, அவர் மனிதனானதால் இப்போது பூமியிலும் எல்லா அதிகாரமும் அவருக்கு உண்டு.** இது நன்றாக யோவான் 5; 26-27 ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*யோவா 5:26 ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். 27 அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.*

இங்கே இயேசு கிறிஸ்து அவருடைய பௌதீக சரீரத்தை குறிப்பிடுகிறார்.

இயேசு இந்த பூமியில் இருந்த சமயம் முழுவதும் தேவனால் ' **மனிதனாக '** அவருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை முழுமையாக உபபோகித்தார். பலமுறை இந்த அதிகாரத்தை அவரிடம் இருந்து வாங்குவதற்கு சாத்தான் அவரை பலமுறை சோதனைகளால் தூண்டினான். ஆனால் ஒரு போதும் இயேசு அவனுக்கு விட்டுக்கொடுக்க வில்லை. இயேசுவோடு நடந்த எல்லா எல்லா மோதல்களிலும் சாத்தானை இயேசு தோற்கடித்தார். பின் இயேசு நம் பாவங்களை எல்லாம் அவர் மேல் சுமந்து, அவற்றுக்காக மரித்து, பாதாளத்துக்கு சென்று, மீண்டும் உயிரோடு எழுந்தார். *மத் 28:18 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

இப்போது இவ்வசனத்தின் படி, முன்பு தேவன் மனிதனுக்கு கொடுத்து - அவன் தவறாக உபயோகித்ததால் இழந்து போன - அதிகாரத்தை இயேசு மீண்டும் பெற்றார். இப்போது இயேசு கிறிஸ்து - மாம்சத்தில் இருக்கிற தேவனாக - வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் உள்ளவராக இருக்கிறார். இதற்கு அடுத்த வசனத்தில், தன் சகல அதிகாரத்தோடும் இயேசு சொல்லுகிறார்......

*மத் 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

இந்த வசனங்கள் மூலமாக உண்மையில் இயேசு என்ன சொல்கிறார் என்றால், **" எனக்கு இப்போது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை நான் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன் ".**

இப்போது இதில் உள்ள மிக முக்கியமான காரியம் என்னவென்றால் " இப்போது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அதிகாரம் - ஆதாமுக்கும், ஏவாளுக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரம் போன்றது அல்ல ". இப்போது விசுவாசிகளாகிய நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்துக்கு ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. இந்த அதிகாரம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் நமக்கும் உள்ள **" கூட்டு அதிகாரம் ".** முன்பு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்டது போல தனியாக முழு அதிகாரமாக இப்போது நமக்கு கொடுக்கப்பட வில்லை. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அவர்களால் சாத்தானுக்கு விட்டுக்கொடுக்க முடியும் ; சாத்தான் அவர்களை ஒடுக்க அனுமதிக்க முடியும் ; நம்பிக்கை அற்றவர்களாக இருக்க முடியும். ஆனால் இப்போது நம் அதிகாரம் **இயேசுவோடு பகிர்ந்து கொடுக்கப்பட்ட அதிகாரம்.** இது ஒரு வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் **கூட்டுக்கணக்கு** ( **joint account** ) போன்றது. பணம் எடுக்க வேண்டும் என்றால் இரண்டு கையெழுத்துக்களும் தேவை. நம்முடைய அதிகாரம் இயேசுவோடு பகிர்ந்து கொள்ளப்பட்டு இருக்கிறது - இயேசுவுடைய அதிகாரம் சபையோடு பகிர்ந்து கொள்ளப்பட்டு இருக்கிறது.

ஒரு வேளை நாம் ' நமது வாழ்க்கையின் ' அதிகாரத்தை அவனிடம் கொடுத்து விடலாம் - அதனால் அதன்முலம் நாம் தனிப்பட்ட முறையில் பல துன்பங்களை அனுபவிக்கலாம். ஆனாலும் இப்போது **"தேவனால் மனிதனுக்கு மீண்டும் கொடுக்கப்பட்ட அதிகாரம் "** ஒருபோதும் முழுமையாக சாத்தானிடம் கடந்து செல்ல முடியாது. இந்த அதிகாரம் இப்போது **" நமக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் இடையே பகிர்ந்து கொடுக்கப்பட்ட அதிகாரம் ".** என்ன நடந்தாலும் இயேசு கிறிஸ்து இந்த அதிகாரத்தை விட்டுக்கொடுக்காமல் உண்மையாகவே இருப்பார். நாம் மிகமிக சரியாக புரிந்து கொள்ள வேண்டும் **" அதிகாரமும் வல்லமையும் இப்போது இருப்பது நம்மிடத்தில் ". இந்த அதிகாரமும் வல்லமையும் தேவனுடையவைகள்;ஆனாலும் அவரது சுய தீர்மானப்படி அவற்றை நம்மோடு பகிர்ந்து கொண்டார்.**

## திராட்சச்செடியும் கொடிகளும்

*யோவா 15:5 நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.*
இயேசு, விசுவாசிகளுக்கும் இயேசுவுக்கும் இடையே உள்ள உறவைப்பற்றி குறிப்பிடும்போது " திராட்சச்செடிக்கும் கொடிகளுக்கும் " இருக்கிற உறவை உவமைப்படுத்தி குறிப்பிடுகிறார். கொடிகள் தங்களுக்கு தேவையான சகல உணவு, சத்து போன்றவற்றை செடியில் இருந்துதான் பெற்றுக்கொள்ளும்; செடியானது தனக்கு இருக்கிற அனைத்தையும் கொடிகள் மூலமாகவே வெளி உலகத்துக்கு கொடுக்கும்.

## தேவன் தன் வார்த்தைக்கு கட்டுப்பட்டவர்

*சங் 138:2 உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.*
*சங் 89:34 என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதைமாற்றாமலும் இருப்பேன். ( மத்தேயு 24:35; மாற்கு 13:31; லூக்கா 21:33;ஏசாயா 55:11; எபி 1:3 ).*
தேவன் தன் வார்த்தையை மாற்றினால் இந்த அகிலம் தானகவே அழிந்து போகும், ஏனென்றால் இந்த அகிலம் நிலை நிற்பது தேவனுடைய வார்த்தையால் ( ***எபி 1:3*** ).
ஆனாலும், மனிதருடன் நடக்கும் சில காரியங்களில் தேவன் தன் திட்டங்களை பின் மாற்றியிருக்கிறார்.
*ஆதி 6:6 தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.*
*1சாமு 15:11 நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; .......*
யாத் 32 ல், தேவன் இஸ்ரவேல் ஜனத்தை அழித்து விட்டு, மோசேயை ஒரு புது ஜனமாக்குவேன் என்று சொன்னபோது, தேவன் அப்படி செய்யக்கூடாது என்று மோசே வேண்டிக்கொண்டபோது, தேவன் அந்த திட்டத்தை மாற்றினார்.
*யாத் 32:14* அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார். ( the LORD repented of the evil )
இவ்வசனங்கள் தேவன் தன் வார்த்தையை மாற்றியதாக சொல்கின்றன. அப்படியானால் இவ்வசனங்கள் ***சங் 89:34; 138:2*** போன்ற வசனங்களுக்கு எதிராக இருகிறதா. இல்லவே இல்லை. இதை சரியாக கீழ்க்காணும் வசனங்களில் இருந்து புரிந்து கொள்ளலாம்.
*எரே 18:7 பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில்,*
*எரே 18:8 நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்.*

*எரே 18:9 கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு.*
*எரே 18:10 அவர்கள் என் சத்தத்தைக்கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்.*
தேவன் தான் செய்வதாக வாக்குரைத்ததை அப்படியே செய்வார். சில சம்பவங்கள் தேவன் தன் வார்த்தையை மாற்றி இருப்பது போல தோன்றும். ஆனால் உற்றுப்பார்க்கும்போது தெரியும், தேவன் ஒரு சமயம் தன் வாக்கை மாற்றியிருக்கிறார் என்றால் அதுவும் தன் வாக்குப்படித்தான் இருக்கும். அவர் தன் வாக்கை நான் மாற்றுவேன் என்று சொல்லியிருந்தால் தன் வாக்குப்படி மாற்றுவார். தன் மக்கள் மேல் அவர் வைத்திருக்கும் அன்பையும் இரக்கத்தையும் இது காண்பிக்கிறது. தன் வாக்கை மாற்றாமல் தன் அன்பையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

பொல்லாதஆவி
*1சாமு 16:14 கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்; கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாதஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது. ( பொல்லாத ஆவி - evil spirit )*
*எரே 24:3 கர்த்தர் என்னை நோக்கி: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; அதற்கு நான்: அத்திப்பழங்களைக் காண்கிறேன்; நல்லவைகளான அத்திப்பழங்கள் மிகவும் நல்லவைகளும், கெட்டவைகளோ புசிக்கத்தகாத மிகவும் கெட்டவைகளுமாயிருக்கிறது என்றேன். ( கெட்டவைகள் - evil )*
முந்தைய வசனம் "கந்தாயத்து naughty" அத்திபழங்கள் என்று குறிப்பிடுகிறது. இதன் அர்த்தம் கெட்ட அல்லது சுவையற்ற. இதை "அசுத்த ஆவியைப்போன்ற" என்று கூற முடியாது. இது போலவே 1 சாமு 16:14ல், தேவன் ஒரு பொல்லாத ஆவியை உபயோகித்தார் என்று சொல்ல முடியாது. மாறாக ஒரு ஊறு விளைவிக்கும், காயப்படுத்தும் ஒரு காரியத்தை செய்வதற்காக தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தேவ தூதனைத்தான் இப்படி வசனம் "பொல்லாத ஆவி" என்று அழைக்கிறது. அதாவது பொல்லாத காரியத்தை செய்வதற்காக அனுப்பப்பட்ட ஒரு ஆவி.

வேதாகமத்தில் ***1 ராஜா 22:19-22, யோபு 1:6*** போன்ற இடங்களில், தேவன் சாத்தானையும் அசுத்த ஆவிகளையும் உபயோகித்தது "போல" குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகள் தண்டனை, சோதனைகள் ஆகும். தேவன் ஒரு போதும் இது போன்ற காரியங்களை ஒரு புதிய ஏற்பாட்டு விசுவாசிக்கு செய்ய மாட்டார். தேவன் நம்மில் அன்பு கூர்வது நாம் செய்கிறவற்றால் அல்ல, இயேசு கிறிஸ்து செய்தவற்றால்.

## தேவன் ஒரு போதும் தன் சித்தத்தை யார் மேலும் திணிக்க மாட்டார்.

*ரோம 9:13 அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. 14 ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே. 15 அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மெல் உருக்கமாயிருப்பேன் என்றார். 16 ஆகையால் விரும்புகிறவனாலும்அல்ல, ஓடுகிறவனாலும்அல்ல, இரங்குகிறதேவனாலேயாம்.17 மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. 18 ஆதலால் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். 19 இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம்பிடிக்கிறார்? அவர் சித்தத்திற்கு எதிர்த்துநிற்பவன் யார்? என்று என்னுடனே சொல்லுவாய். 20 அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? 21 மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?*

## தேவன் பட்சபாதமுள்ளவரல்ல

*அப் 10:34 அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்,*
*ரோம 2:11 தேவனிடத்தில் பட்சபாதமில்லை.*
*எபே 6:9 ........... அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்.*
*1பேது 1:17 அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால்,..........*
*யாக் 2:9 பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்.*

வேதாகமத்தில் சில வசனங்களை எடுத்து, தேவன் பட்ச பாதமாக நடந்து கொள்வார், அவர் எல்லாவற்றையும் முன்குறித்திருக்கிறார் என சிலர் சொல்லுவதும், அதை சிலர் விசுவாசிப்பதும் உண்டு. இதனால் தேவனிடம் இருந்து எதையாவது பெற்றுக்கொள்வதில் சில சிக்கல்கள் வரும். ஆனால் அவ்வசனங்களை முறைப்படி மனதிலாக்கிக்கொண்டால், தேவன் பட்சபாதமாக நடப்பதில்லை என்று நன்றாக மனதிலாக்கிக்கொள்ளலாம்.

*ரோம 9:15 அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மெல் உருக்கமாயிருப்பேன் என்றார்.*
*ரோம 9:14 ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே.*

*14* ம் வசனம் சொல்கிறபடி, யாரும் பவுலின் வார்த்தைகளை வைத்து "தேவனிடம் அநீதி உண்டென்று சொல்லக்கூடாது" என்று பவுல் சொல்லுகிறார். மற்றொருவருக்கு அநீதி செய்யாமல், தேவனால் ஒருவருக்கு இரக்கம் காண்பிக்க முடியும். ***மத் 20:1-16*** ல் குறிப்பிடப்பட்டுளது போல, தேவன் எல்லோரையும் சமமாக நடத்துகிறார், சிலருக்கு அதிகமாக இரக்கம் காண்பிக்கிறார். இது அநீதி அல்ல. ***லூக்கா 13:1-9***லும் இது போன்ற ஒரு விளக்கம் காணமுடியும். இயேசு சொல்லுகிறார் அவர்கள் அனைவரும் அப்படியான தண்டனைக்கு பாத்திரவான்கள், ஆனாலும் தேவன் தன் இரக்கத்தினால் அவர்களை விடுவித்தார் ( ***லூக்கா 13:2*** ).

***லூக்கா 13:6-9*** வரை உள்ள வசனங்களில் "இது இந்த வருஷமும் இருக்கட்டும்;" என்று தன் இரக்கத்தை காண்பிக்கிறார். இதுபோல மற்றவர்களின் விண்ணப்ப ஜெபத்தால், தேவன் அதிக இரக்கம் காண்பிப்பார். இது அவரது தீர்மானம். தேவன் யாரையாவது தண்டனைக்குள் கொண்டு வருகிறார் என்றால் அது நீதியாகவே இருக்கும். அது போல தேவன் யார் மேலாவது இரக்கம் காண்பிக்கிறார் என்றாலும் அது நீதியாகவே இருக்கும். ஒருவருக்கு நீதி இழைப்பதற்காக மற்றொருவருக்கு தேவன் அநீதி இழைப்பது இல்லை.

### பார்வோனுடைய மனக்கடினம்.

**மனக்கடினம் என்ற வார்த்தையின்** எபிரேய பதம் "skl¢runœ". இதன் அர்த்தம் "கெட்டியாக்கு, கடினமாக்கு, உணர்ச்சியற்றதாக்கு, அபாயத்தை உணரமுடியாமல் ஆக்குதல்.
பார்வோனின் இந்த மனக்கடினம் ***"யாத் 8:15, 32; 9:34***" போன்ற இடங்களில் பார்வோனே செய்ததாகவும், ***யாத் 4:21; 7:3; 9:12; 10:20,27; 11:10*** போன்ற இடங்களில் கர்த்தர் பார்வோனுடைய மனதை கடினப்படுத்தினதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதில் இருந்து, "உறுதியாகவும் முட்டாள்தனமாகவும் பார்வோன் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்க வேண்டும்" என்ற சித்தத்தை தேவன் பார்வோன் மேல் திணித்ததாக நாம் எடுக்க கூடாது. தீமை தேவனுடைய சமூகத்தில் கிடையாது. தேவன் யாரையும் தீமை செய்யவும் தூண்டுவது இல்லை ( ***யாக் 1:13*** ). மனிதர் தீமை செய்வது அது அவர்களது சொந்த சுபாவத்தில் இருந்து வருவதாகும் ( ***யாக் 1:14*** ). தேவன் பார்வோனுடைய இருதயத்தை கடினப்படுத்தினார் என்றால், தேவன் செய்ததெல்லாம் "என் ஜனத்தை அடிமைத்தனத்தி இருந்து விடுவி என்ற கட்டளையை கொடுத்தது மாத்திரமே ". இதன் மூலம் தேவன் செய்தது என்னவென்றால், பார்வோனுக்கு ஏற்கனவே பிடிக்காத, அவன் செய்ய மாட்டேன் என்று உறுதியாக இருக்கிற ஒரு காரியத்தை தேவன் அவனிடம் செய்யச்சொன்னார். இது சண்டைக்கு செல்வோம் என்று தீர்மானித்திருக்கிற ஒரு குத்துச்சண்டை வீரனுக்கு ஒரு அடி கொடுப்பது போல. அல்லது போதை மருந்து பழக்கத்துக்கு அடிமையான ஒருவரிடம் கட்டாயமாக நீ போதை மருந்து உபயோகிக்கக்கூடாது என்று தடை செய்வது போல. பார்வோன் ஏற்கனவே கடினப்பட்ட இருதயம் உடையவனாக இருந்தான். தேவன் அவனது இருதய கடினத்தை, தன் வல்லமையை உலகுக்கு காண்பிப்பதற்காக உபயோகப்படுத்திக்கொண்டார்.

## குயவனும் களிமண்ணும். ( ஒரு பாத்திரம் கனமான காரியத்துக்கு, ஒரு பாத்திரம் கனவீனமான காரியத்துக்கு ).

*எரே 18:4 குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறேபாண்டமாக வனைந்தான்.*
இங்கே குயவன் வனைந்த மண்பாண்டம் சரியாக வராமல் கெட்டுப்போனதன் காரணம், குயவன் அல்ல, அந்த களிமண். குயவன் அந்த களிமண்ணை ஒரு நல்ல பாத்திரமாக வனைவதற்கு அது ஒத்துழைக்கவில்லை. குயவன் அந்த களிமண்ணை தூர எறிந்து விடுவதற்கு பதிலாக அதை உபயோகித்து ஒரு சாதாரண பாத்திரத்தை உருவாக்குகிறான். இப்பாத்திரம் அவன் முதலில் உருவாக்க நினைத்த உயர்ந்த பாத்திரம் போல இல்லை என்றாலும், சாதாரண உபயோகத்துக்கு போதும்.
இது போலவே தேவன் யாரையும் அழிப்பதற்காக உருவாக்குவதில்லை. சிலர் தேவன் அவர்களை உருவாக்க நினைக்கும் சித்தத்துக்கு ஒத்துழைப்பார்களானால் தேவன் அவர்களை உன்னத நிலையில் உருவாக்குவார். சிலர் தேவனுக்கு ஒத்துழைக்காத போது அவர்களை அழிப்பதை விட்டு விட்டு சில சாதாரண காரியங்களுக்காக அவர்களை உருவாக்குவார்.

### யாக்கோபும் ஏசாவும்

*ரோம 9:13 அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது.*
"வெறுத்தேன்" என்பதற்கான எபிரேய பதம் miseஹ என்பதாகும். இங்கே இதன் அர்த்தம் வெறுப்பது அல்ல, குறைவாக சிநேகிப்பது. இதன் அர்த்தம் நான் யாக்கோபை சிநேகித்தேன், ஏசாவை குறைவாக சிநேகித்தேன். இவர்கள் அவர்களது தாயின் வயிற்றில் இருக்கும்போதே தேவன் இப்படி செய்யவில்லை. தேவன் யாக்கோபை, ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்கு சுதந்திரன் ஆக்கினார். ஆனாலும் ஏசா தேவனோடு நடந்து தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கலாம். இது முதலில் எழுதப்பட்ட மல்கியா 1:2-3 வசனங்கள் கி.மு 557 - 525 ல் எழுதப்பட்டவை. அதாவது யாக்கோபும் ஏசாவும் பிறந்து ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு பிறகு. ஆகவே இது பிறக்குமுன்பே தேவன் ஏசாவை வெறுத்தார் என்று சொல்லவில்லை. மேலும் இவ்வசனங்கள் யாக்கோபு, ஏசா என்ற தனி மனிதனை குறிப்பிடுவது அல்ல. யாக்கோபு என்பது இஸ்ரவேல் ஜனத்தையும், ஏசா என்பது

ஏதோமியரையும் குறிப்பிடுகிறது. ஆகவே, தேவன் ஏதோமிய ஜனத்தை வெறுத்து, இஸ்ரவேல் ஜனத்தை சிநேகித்தார் என்பதே இதன் அர்த்தம்.
இதை பவுல் உபயோகிக்கும்போது, தேவன் தன் முன்னறிவினால், அவர்கள் பிறக்கு முன்பே யாக்கோபை தெரிந்து கொண்டதை, சரியான தெரிந்தெடுப்பு என்று குறிப்பிடுகிறார். யாக்கோபு தேவனுடைய வல்லமையான மனிதனானார், ஏசா தேவனுடைய காரியங்களை உதாசீனப்படுத்தினார். தேவன் யாக்கோபை தெரிந்தெடுத்ததனால் இது நடக்கவில்லை. தேவனுடைய தெரிந்தெடுப்பு சரியானதாதே என்று இதன் மூலம் மல்கியாவில் உறுதிப்படுத்தப்படுகிறது.

## முன்குறித்தல்

*ரோம 8:29 தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;*
இவ்வசனத்தை எடுத்து சில "ஒருவரது வாழ்க்கையில் சம்பவிக்கும் அனைத்தையும் தேவன் ஏற்கனவே முன்குறித்திருக்கிறார். அதன்படிதான் நடக்கும் " என்று தவறாக மனதிலாக்கிக்கொள்ளுகின்றனர். அதனால் நன்மைக்கு ஒத்துழைத்து தீமைக்கு எதிராக போராடுவதற்கு தவறி விடுகிறார்கள். நம் வாழ்க்கையில் நடப்பது அனைத்தையும் தேவன் முன்குறித்திருக்கிறார் என்றால், ஒருவர் பாவம் செய்கிறதும் தேவனால் முன்குறிக்கப்பட்டது என்று ஆகிவிடும். அப்படி இருக்க முடியாது.
இவ்வசனம் "தேவன் முன்னறிந்தாரோ.. அவர்களை முன்குறித்திருக்கிறார்" என்று குறிப்பிடுகிறது. அதாவது யாரெல்லாம் தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்வார்களோ அவர்களை எல்லாம் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். தேவன் யாரையும் இவர் இரட்சிக்கப்பட வேண்டும், இவர் நரகத்துக்கு போக வேண்டும் என்று முன்குறிப்பது இல்லை.

## வேதாகமம் உங்களை பற்றி சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்.

*பிலே 1:6 உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துஇயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன்.*
*யோவா 17:22 நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.*
மகிமை என்ற வார்த்தைக்கான கிரேக்க பதம் "doxa" என்பதாகும். தேவனுடைய மகிமை என்பது "தேவனுடைய சுபாவமும் செயல்களும் சுயமாக வெளிப்படுத்தப்படுதல்". அதாவது " அவர் யார் என்பதும் அவரது செயல்களும் அவர் தெரிந்தெடுத்த விதத்தில் வெளிப்படுத்தப்படுதல்". ஆகவே தேவன் அவருக்கு கொடுத்த மகிமையை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார் என்றால், அதே "தெய்வீக சுபாவத்தை" நமக்கு இயேசு கொடுத்திருக்கிறார் ( ***2 பேதுரு 1:4*** ). அதனோடு கூட ஒன்றாயிருக்கிற வல்லமையையும் கொடுத்திருக்கிறார் ( ***யோவான் 17:21*** )

## கிறிஸ்துவினாலே

*பிலி 4:13 என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.*
இயேசு கிறிஸ்து மூலமாக, தேவனுடைய சித்தப்படியான எதையும் நம்மால் செய்ய முடியும். நாம் நம்முடைய சுய பெலத்தில் இதை செய்ய முடியாது. தேவன் நமக்கு பதிலாக எல்லா காரியங்களையும் செய்ய மாட்டார். நாம் இயேசுவுக்கு உடன் சுதந்திரர். இயேசு இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அவர் மூலமாக எல்லாம் செய்ய முடியும். செய்ய வேண்டும். இதுவே தேவனுடைய சித்தம். ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்முடைய பங்கையும் தேவனுடைய பங்கையும் நாம் நன்றாக மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். அப்போது தேவன் நமக்கு தந்திருக்கிற பொறுப்புக்களை நாம் செய்து, தேவனுடைய பொறுப்புக்களை அவர் செய்யும்படியாக விட்டு, ஒரு வெற்றிகரமான ஆவிக்குரிய வாழ்க்கை நம்மால் வாழ முடியும்.

**ஆமென்.**
**ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருங்கள்.**
**Bro D. Vergin Kumar**

If you need any clarifications kindly contact me in **deeveekumar@yahoo.com** Ph;00968 25572195, 00968 99663557.
**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament, Vincent's New Testament Word Studies, Discipleship Evangelism lessons by Don Krow, Wuest’s New testament Word Studies, All bible quotes are from King James Version bible, unless quoted otherwise.

-----------------------------------

To add some examples of like…..God told us to pray…us to chase the devil….. etc.
Only God knows the second coming……He will make the fruit…they are His responsibility…….